ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2081/50 - 2018 ජූලි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.26

2081/50 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச்சபை

*சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு 08 மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

எஸ்.ஏ.என்.சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க,
உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, யூலை 26.

### அட்டவணை

சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆந் திகதிய 599/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் விரிவாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டுள்ளதும், கடைசியாக 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789 /19 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையில் பகுதி II இற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியை பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

பாகம் II

மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்

நிரல் I

**வேலையாளரின் வகுப்பு :**

தரம் I பண்டகசாலைப் பொறுப்பாளர், கணக்கு பதியுநர்கள், முகாமையாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், மருந்தாளர்கள்.

தரம் II தொலைபேசி இயக்குநர்கள், எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், பேரேட்டு எழுதுவினைஞர்கள், கணக்கு, எழுதுவினைஞர்கள், உதவிக் காசாளர்கள், செலவுக் கணக்கு எழுதுவினைஞர்கள், சம்பள எழுதுவினைஞர்கள், காசு இயந்திர இயக்குநர்கள், பற்றுச்சீட்டு எழுது வினைஞர்கள்.

தரம் III பற்றுச்சீட்டு சேகரிப்போர், விற்பனையாளரும் விற்பனைப்பெண்களும், செவ்வைபார்ப்போர்.

தரம் IV தொழிலாளர்கள், ஒப்படைப்பாளர்கள், கடைச் சிப்பந்திகள், பொதியிடுவோர்கள், செய்திப் பணியாளர்கள், கருமபீடப் பணியாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், பம்பிக் கவனிப்பாளர்கள், துவிச்சக்கரப் பணியாளர்கள்.

நிரல் II

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம் ஊழியர்களின் வகுப்பு**

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 - ஆம் ஆண்டு | 13,580.00 | 12,876.00 | 12,179.00 | 11,500.00 |
| 2 - ஆம் ஆண்டு | 13,755.00 | 13,026.00 | 12,304.00 | 11,600.00 |
| 3 - ஆம் ஆண்டு | 13,390.00 | 13,176.00 | 12,429.00 | 11,700.00 |
| 4 - ஆம் ஆண்டு | 14,105.00 | 13,326.00 | 12,554.00 | 11,800.00 |
| 5 - ஆம் ஆண்டு | 14,280.00 | 13,476.00 | 12,679.00 | 11,900.00 |
| 6 - ஆம் ஆண்டு | 14,455.00 | 13,626.00 | 12,804.00 | |
| 7 - ஆம் ஆண்டு | 14,630.00 | 13,776.00 | 12,929.00 | |
| 8 - ஆம் ஆண்டு | 14,805.00 | 13,926.00 | 13,054.00 | |
| 9 - ஆம் ஆண்டு | 14,980.00 | 14,076.00 | 13,179.00 | |
| 10 - ஆம் ஆண்டு | 15,155.00 | 14,226.00 | 13,304.00 | |

8 - 471

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.